

" செப்புமொழி பதினெட்டுடையாள் – எனிற்
சிந்தனை ஒன்றுடையாள்!''
" சேதமில்லாத ஹிந்துஸ்தானம் – இதை
தெய்வமென்றுக் கும்பிடடி பாப்பா!''
– மகாகவி பாரதியார்

ஸ்ரீ

காஷ்மீர் துறவி

# ஆச்சார்யா அபிநவகுப்த

## 1000வது ஆண்டு விழா



நாள் : ஸ்ரீ மன்மத வருஷம் பங்குனித் திங்கள் 18ஆம் நாள்
(31.03.2016) வெள்ளிக்கிழமை
சரியாக மாலை 6.45 மணி
(மாலை 6.15 மணி முதல் கலை நிகழ்ச்சிகள் துவங்கும்)

இடம் : **இன்போசிஸ் கலையரங்கம்**
இராமகிருஷ்ணா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி வளாகம்,
தி.நகர், (விவேக்ஸ் பின்புறம்), சென்னை

## காஷ்மீரின் வீர சைவத்துறவி
## ஆச்சார்ய அபிநவகுப்த மஹாராஜ்

பாரத தேசத்தின் மணிமகுடமாய் விளங்கும் காஷ்மீரில் அவதரித்தவர் மகான் அபிநவகுப்த, உலகளவில் வாழ்ந்த ஆச்சார்யர்களில் தலைசிறந்த தத்துவஞானியாக, சிறந்த படைப்பாளியாக, ஆன்மீகக் குருவாக விளங்கியவர்களில் தன்னிகரற்றவர். நமது உயிரோட்டமுள்ள கலாச்சாரத்தில் அபிநவகுப்தாவில் தாக்கம் கடந்த ஆயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்து இன்றும் இருந்துவருவது அவரது பெருமையைப் பறைசாற்றும். மேலும் 50க்கும் மேற்பட்ட நாடுகளில் இவரது தத்துவங்கள் குறித்து இன்றளவும் ஆய்வுகள் நடந்து வருவதும் பாரதீயர்களான நமக்கெல்லாம் உத்வேகத்தை தருவதாகும்.

❖ சிவபெருமானே அபிநவகுப்தாவாக அவதரித்து சைவ சித்தாந்தத்திற்கு மீண்டும் உயிரூட்டினார் என்பது இன்றும் வடபாரத சைவ சித்தாந்திகளின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும்

❖ ''அகம் பிரம்மாஸ்மி; சிவோஹம்'' என்ற அத்வைதக் கொள்கையை ஆதிசங்கரர் போலவே, காஷ்மீரத்தில் துவங்கி தெற்காசிய நாடுகளெங்கும் பரப்பியது இவரது அரிய சாதனையாகும்.

❖ தன் வாழ்நாளில் 250க்கும் மேற்பட்ட வேத நூல்களை ஆராய்ந்தவர்.

❖ தாந்தீரிகம், அழகியல், தத்துவம், இசை, நாட்டியம் என பல்வேறு துறைகளில் முத்திரைப் பதித்தவர்.

❖ ''தாந்திரியோக்'' என்ற இவரது நூலே இன்றைய அளவிலும் தாந்திரிக வழிபாட்டு முறைக்கு சிறந்த ஒரு கலைக்களஞ்சியமாக விளங்கி வருகிறது.

❖ வழிபாட்டுமுறைகளில் மட்டுமல்லாது இசை நாட்டியத்தாலும் இறைவனை அடையமுடியும் என உணர்த்தியவர். பரத முனிவரின் பரதநாட்டியத்தைப் பற்றிய இவர் எழுதிய ஓர் ஆய்வு நூல் தான் **''அபிநவபாரதி''**

❖ இவர் எழுதிய 42 நூல்களில் 22மட்டுமே கிடைக்கப்பெறுள்ளன. அதில் ''பைரவ ஸ்தோத்திரம் பிரசித்திப் பெற்றது.

❖ இவரது சீடர்களின் மொத்த எண்ணிக்கை 10,000க்கும் மேல் இருந்தனர்.

❖ இன்றைய கேரளத்து நம்பூரிதிகளும், கர்நாடகத்து கூர்க்குகளும், அபிநவகுப்தாவின் ஆன்மீக வழியில் தழைத்து, காஷ்மீரிலிருந்து இடம்பெயர்ந்து கேரளாவிலும், கர்நாடகத்திலும் குடியேறியவர்கள் என்று கூறப்படுகிறது.

❖ தனது 70வது வயதில் 1200 சீடர்களுடன் ஸ்ரீ நகர் - குல்மார்க் சாலையின் ஓரத்தில் அமைந்திருந்த குகை ஒன்றில் தனது ''பைரவி ஸ்தோத்திரத்தைப்'' பாடிக்கொண்டே சென்ற அபிநவகுப்தா மீண்டும் திரும்பி வரவேயில்லை; சிவனோடு ஐக்கியமாகி விட்டார் என்பது மக்களின் நம்பிக்கை.

❖ காஷ்யப முனிவரால் உருவாக்கப்பட்டு லலிதாத்ய மன்னனால் ஆன்மீகப்பூமியாக வளர்க்கப்பட்ட காஷ்மீரம், கலைகளின் தெய்வமான சாரதா தேவியின் இருப்பிடம் என போற்றப்பட்ட பூமி காஷ்மீரம். தத்துவங்களின் பிறப்பிடமாய் விளங்கி உலகிற்கே ஆன்மீக ஒளிபரப்பிய காஷ்மீரம் இன்று தனது அடையாளத்தை இழந்து வருவது நாடெங்குமுள்ள தேசபக்தர்களின் மனதளவில் கவலையை ஏற்படுத்தி வருகிறது.

இவ்வேளையில்தான் மீண்டும் அம்மண்ணில் - பாரத தேசத்தின் மணி மகுடமாய் விளங்கும் காஷ்மீரத்தில் தோன்றிய ஆச்சார்ய அபிநவ குப்தாவின் 1000வது ஆண்டு விழா நடைபெறுகிறது.

*நாமும் ஆச்சார்ய அபிநவகுப்தாவின்*
*1000வது ஆண்டுக் கொண்டாட்டத்தில் இணைவோம்!*
*பாரதத்தின் ஆன்மநேய, தேசிய ஒருமைப்பாட்டு சிந்தனையை*
*நம் நாடெங்கும் பரப்புவோம்!*

# ஆச்சார்யா அபிநவகுப்த 1000வது ஆண்டு விழா

**அன்புடையீர்! வணக்கம்.**

வணக்கம் இப்பூவுலகிலேயே இன்னும் உயிரோட்டமுள்ள ஜீவநதியாக ஓடிக்கொண்டிருக்கும் நம் பாரதத் தேசப் பண்பாட்டு நதிக்கு மூலஸ்தானமாய் இருப்பவர்கள் வணக்கத்தற்குரிய ரிஷிகளும், மகான்களுமே. காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை நாடெங்கும் எத்தனையோ தெய்வீகப் புருஷர்கள் தோன்றி நம் நாட்டிற்கு மட்டுமன்றி, உலகிற்கே வழிகாட்டிகளாகவும் வாழ்ந்து புனிதப்படுத்தினர். அவ்வகையில் நம் நாட்டின் மணிமகுடமாக விளங்கும் காஷ்மீரில் ஆயிரமாண்டுகளுக்கு முன்பு ஆச்சார்ய அபிநவ குப்த தோன்றி வாழ்நாள் முழுதும் நம் ஹிந்து தர்மத்தையும் பாரம்பரியமான கலாச்சாரத்தையும் வலுவூட்டியுள்ளார் என்பது மகிழ்வான செய்தி. அவரது ஆயிரமாவது ஆண்டு விழாவை சென்னையில் ''சுவாமி அபிநவகுப்த ஆயிரமாவது ஆண்டு விழாக்குழு'' மிகவும் சிறப்பாக கொண்டாட ஏற்பாடு செய்துள்ளது. அனைவரும் கலந்து கொண்டு இவ்விழாவினை சிறப்பிக்க அன்புடன் வேண்டுகிறோம்.

## நிகழ்ச்சி நிரல்

தலைமை :

Dr. திரு. A. **கலாநிதி** அவர்கள்
(முன்னாள் துணைவேந்தர், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை)

சிறப்புரை :

திரு. **அஜய் பாரதி** அவர்கள்
(அமைப்பாளர், ஜம்மு காஷ்மீர், கல்வி மையம், புதுடில்லி)

திரு. **மாலன்** அவர்கள்
(பத்திரிகையாளர்)

நன்றியுரை :

திரு. **ம.கொ.சி. இராஜேந்திரன்** அவர்கள்
(ஒருங்கிணைப்பாளர், ஆச்சார்யா அபிநவகுப்த
1000வது விழாக்குழு, சென்னை)

**அனைவரையும் அகமகிழ்வுடன் வரவேற்கும்**

**ஆச்சார்ய அபிநவகுப்த**
**1000வது ஆண்டு விழாக்குழு, சென்னை**